மேல் வாடகை கிடையாது. ஆனால் எனக்கு மட்டும் 2,056 ரூபாய் போட்டிருந்தார்கள் என்பதை அரசு அறியுமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகை முறையில் தொழில் கூடங்களை பெற்ற தொழில் முனைவோர்கள் ஒழுங்காக வாடகையைச் செலுத்தி வருவார்களேயானால், அவர்களுக்கே அந்தத் தொழில் கூடங்களைச் சொந்தமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அந்தத் தொழில் கூடத்திற்கு மற்றவைகளைக் காட்டிலும் அதிகமாக வாடகை அறிவித்திருப்பதாக இங்கே எடுத்துச் சொன்னார்கள். மற்ற தொழில் கூடங்களுக்கு 1971-ஆம் ஆண்டு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த அடிப்படையில் இன்றைக்கு இருக்கிற விலைவாசி அடிப்படையில் அந்த வாடகை நிர்ணயம் செய்து இருக்கக்கூடும். ஆனால் இன்றைக்கு அந்த இடத்திற்கு இருக்கிற விலை மதிப்பைக் கணக்கிலே வைத்து. வாடகையை சற்று உயர்த்தி இருக்கக்கூடும் என்று நான் கருதுகிறேன். இது மூலக் கேள்வியோடு தொடர்புடைய பிரச்சினை அல்ல என்பதால் அதற்கான சரியான பதில் என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய பிரச்சினையை சம்பந்தப்பட்ட தொழில் துறையோடு கலந்து பேசி, அதற்கான விளக்கம் என்ன என்பதை அவர்களுக்கு நேரில் தெரிவிக்கிறேன்.

ஆதி திராவிட நலத்துறைக்குத் தனி வட்டாட்சியர்.

4799—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி வட்டம் ஆதி திராவிடர் நலத்துறைக்கு தனி வட்டாட்சியர் நியமிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டத்திற்கு 10 தனி வட்டாட்சியர் அலுவலகங்கள் ஏற்படுத்திட உத்தரவிடப்பட்டுள்ளது. இந் தனி வட்டாட்சியர் அலுவலகங்களை மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்கிறார். மேற்கண்ட 10 தனி வட்டாச்ட்யரில் பேராவூரணி வட்டம் அடங்கவில்லை

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1900 மே 7

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலில் வட்டாட்சியர் அலுவலகம் இல்லையென்று சொன்னார்கள். ஆகவே இரண்டடாவது எனது கேள்விக்கு இடமில்லை. இருந்தாலும் கூட, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆதிதிராவிட மக்களை பாதுகாக்க வேண்டுமென்று நினைத்தால், அவர்களுடைய கோரிக்கைகளை விரைந்து செய்யவேண்டும், அவர்களுக்கு வேண்டிய பிரச்சினைகளை, விவகாரங்களை தீர்க்கவேண்டுமென்று நினைத்தால், ஒவ்வொரு வட்டத்திலேயும்........(குறுக்கீடு).

9-40 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பொதுவான அறிவுரை இப்போது அடங்கவில்லை என்கிறார். நீங்கள் அடங்குகிறீர்களா, இல்லை கேட்கிறீர்களா? (சிரிப்பு)

திரு. ஆர். சிங்காரம் : ஆகவே ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு ஆதிதிராவிடர் நல வட்டாட்சியரை நியமிக்க வேண்டும் அதே நேரத்தில் பேராவூரணியில், பட்டுக்கோட்டையில் இருக்கின்ற வட்டாச்சியர் சுமார் 25 கிலோமீட்டர் வந்து காரியங்களை ஆற்றுவதற்கு மிகவும் சிரமமாக இருக்கின்ற காரணத்தினால் தயவு செய்து மாண்புமிகு அமைச்சரவர்கள் மீண்டும் மறு பரிசிலனை செய்து வட்டாட்சியரை, பேராவூரணியிலே நியமிப்பதற்கு பரிசீலிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலப் பணிகளுக்காக அரசு மாநிலம் முழுவதும் 80 தனி தாசில்தார்களை பணியிலமர்த்திட உத்தரவிட்டுள்ளது. இப்போது இந்த மாநிலத்தில் 162 வட்டங்கள் உள்ளன. இரண்டு வட்டத்திற்கு ஒரு தனி வட்டாட்சியர் வீதம் கிட்டத்தட்ட மாநிலம் முழுவதும் 80 தனி வட்டாட்சியர்கள் அமர்த்தப்பட்டிருக்கின்றனர், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, பணிகளில் தயக்கம் ஏற்பட்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை இருககுமானால், அந்த தனி வட்டாட்சியரை நியமித்து ஒவ்வொரு பணியிலும் விரைந்து செயல்பட அரசு ஆவன செய்யும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் முயற்சிப்பதாகச் சொன்னார்கள் ஆனால் இது பேராவூரணி வட்டாட்சியர் அலுவலமாகி சுமா. 15 ஆண்டுகாலமாகிவிட்டது. 6 ஆண்டுக்காலம் ஆகிய ஆதிதிராவிடர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வட்டாட்சியர் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆனால் 15 ஆண்டுக்காலம் ஆகியும் பேராவூரணியில் நியமிக்கப்படவில்லையே, ஒரு வேளை அது காங்கிரசினுடைய தொகுதி என்பதனால் அதை ஒதுக்கி விட்டீர்களா? தயவு செய்து விரைந்து செய்யவேண்டுமென்று—....
(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்றைக்கே மாண்புமிகு முதல்வர் அவர்கள் உங்களுக்கு ஒன்றை அறிவித்தார்கள் என்று நினைக்கிறேன். கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். இதைப் பற்றி ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரிடத்தில நான் கேட்கிறேன், தயவுசெய்து விரைந்து செயல்படுவாரா என அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவா்கள் சொன்னபடி எந்த பாராபட்சமும் இந்த அரசுக்கு இல்லை. பணிகளை முடுக்கிவிட இந்த அரசு தனி கவனம் செலுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத்துறைக்கு வருகின்ற தாசில்தார்கள் அத்தனை பேரும் 2 மாதம், அல்லது 3 மாதங்கள் வரை இருந்துதான் வேலை பார்க்கின்றார்கள். பிறகு லீவ் போட்டு விட்டு, வேறு துறைக்குச் சென்று விடுகிறார்கள். எனவே ஆதிதிராவிடர் நலத்துறைக்கு வருகின்ற தாசில்தார்கள் இத்தனை ஆண்டுக்காலம் அந்தத் துறையிலேயே பணியாற்ற வேண்டுமென்று கட்டுப்பாடோடு தாசில்தார்கள் ஏற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு ஒவ்வொரு தாசில்தாரிடத்திலேயும் ஜீப்பே கிடையாது. அவர்கள் சென்று வருவதற்கு வாகன வசதி கிடையாது. முன்னேற்றமான பணிகளோ அல்லது திட்டங்கள் தயாரிக்கின்ற பணிகளோ மிகத் தாமதப்படுத்தப் படுகின்ற காரணத்தினால், இரண்டு தாசில்தார்களுக்கு ஒரு ஜீப்பையாவது வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வட்டாட்சியருக்கும் பொதுவாக வாகன வசதி இருக்கிறது. அந்த வாகன வசதியை வைத்துக்கொண்டுதான் தனி வட்டாட்சியர் அவர்கள் செயல் படுகிறார்கள். தற்காலிகமாக பணி முடக்கப்பட்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்குமேயானால் உறுப்பினர் அவர்கள் அரசுக்குத் தெரிவிப்பாரேயானால் அதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்து, ஆவன செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நினைவுச் சின்னம்.

* 5177—திரு. கே. பிச்சாண்டி:

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிக்கு விடையளிப்பாரா :